# ஹோர்மோன் தாக்கத்தினால் ஏற்படும் தலைமுடி உதிர்வு (Male / Female Pattern baldness or androgenetic alopecia)

இவ்வகையான தலைமுடி உதிர்வானது பொதுவாக தலையில் வழுக்கை ஏற்படுதல் என அழைக்கப்படுகின்றது. ஆண் பெண் இருபாலாரிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

ஆண்களில் 50% ஆனவர்களில் 50 வயதை அடையும் போதும் பெண்களில் 50% ஆனவர்களில் 65 வயதை அடையும் போதும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

பெண்களில் அறிகுறியானது பொதுவாக தலைமுடி மெலிதாகி தடிப்பம் குறைவடைந்து உதிர்வதுடன் முழுமையாக தலைமுழுவதும் பரவலாம்.

## 1. இது ஏற்படக் காரணம் என்ன?

- பரம்பரை அலகு மற்றும் ஹோர்மோன் தாக்கம் காரணமாக ஏற்படுகின்றது. பரம்பரை அலகு தாக்கம் கொண்டவர்களின் தலைமயிரின் வேர்ப்பகுதியில் DHT (Dihydrotestosterone) எனப்படும் ஹோர்மோனினால் ஏற்படும் தாக்கமே இங்கு பிரதானமான காரணியாகும்.
- இங்கு ஹோர்மோனின் அதி தொழிற்பாட்டைக் காட்டிலும் ஹோர்மோனிற்கு தலைமுடி அதிக உணர்திறனை காட்டுவதால் பாதிப்பு ஏற்படுகின்றது.
- படிப்படியாக தலைமுடியின் எண்ணிக்கை குறைவடைந்து இறுதியில் வழுக்கை ஏற்படலாம்.
- இவை ஓர் குறிப்பிட்ட வடிவத்தில் ஏற்படுவதைக் காணலாம்.
- இந்த நிலையானது பரம்பரை பரம்பரையாக தந்தை மற்றும் தாயின் பரம்பரை அலகிலிருந்து அடுத்த சந்ததிக்கு கடத்தப்படலாம்.
- சில பெண்களின் சூலகத்தில் ஏற்படும் திரவக்கட்டிகள் (Polycystic ovary syndrome) காரணமாகவும் தலைமுடி தடிப்பு குறைவு ஏற்படும்.

## 2. Pattern hair loss இன் நோய் அறிகுறிகள் எவை?

ஆண்களிலும் பெண்களிலும் இந்நோயின் வெளிப்பாடு வேறுபடும். தெளிவாக தலைமுடியின் எண்ணிக்கை குறைவடைய முன்பு குறித்த பகுதியில் / பகுதிகளில் தலைமுடியின் நீளம் மற்றும் தடிப்பு குறைவடைவதை அவதானிக்கலாம்.

ஆண்கள் : தலைமுடி உதிர்வடைதல், தலையின் உச்சி மற்றும் தலையின் முற்பகுதியின் இருபுறமும் தலைமுடியானது தடிப்பு குறைவடைந்து மண்டையோடு தென்பட ஆரம்பிக்கும்.

பெண்கள் : தலையின் முற்பகுதி, நடுப்பகுதியில் மண்டையோடு தென்பட ஆரம்பிக்கும்.

## 3. இந்நோய் எவ்வாறு கண்டறியப்படுகிறது?

தோல் வைத்திய நிபுணரிடம் பரிசோதித்து கொள்வதன் மூலமாக இந்நோய் நிலைமையை கண்டறியலாம். அத்துடன் தேவையேற்படின் விஷேட பரிசோதனைகளையும் சில வேளைகளில் மேற்கொள்வர் (Dermatoscopy).

## 4. இதற்கான சிகிச்சை முறைகள் என்ன?

தலைமுடி உதிரும் வீதத்தைக் கட்டுப்படுத்தி புதிய தலைமுடி வளர்வதற்காக பல சிறந்த சிகிச்சை முறைகள் உள்ளன.

ஆரம்பத்திலேயே தோல் வைத்திய நிபுணரின் ஆலோசனையை பெறுவதன் மூலமாக வெற்றிகரமான சிகிச்சைப் பெறுபேற்றினை பெற்றுக் கொள்ளலாம்.

ஆனாலும் சிகிச்சையின் பலனைத் தெரிந்து கொள்வதற்கு 3 – 6 மாத காலம் வரை எடுப்பதுடன் சிகிச்சையை கைவிட்டால் குறுகிய காலத்திற்குள் தலைமுடி உதிர்வடையும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சிகிச்சை முறைகள்

- மினொக்சிடில் திரவம் (Minoxidil 2 % - 5%)
- குளிசைவகைகள்

  ஆண்கள் - Finasteride
  பெண்கள் - Spironolactone, Cyproterone acetate, Finasteride
  (கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் உட்கொள்ளக்கூடாது.)

- PRP – Platelet Rich Plasma சிகிச்சை முறை (செறிவாக்கப்பட்ட குருதிச்சிறுதட்டு திரவவிழையம்)
- தலைமுடியை நாட்டுதல் - Hair transplant
- தற்காலிகமாக பயன்படுத்தக்கூடிய முறைகள்
  - Micropigmentation (tattoo)
  - Hair pieces
  - Wigs

இவ்வாறு உள்ளவர்கள் கடும் வெயிலில் இருந்து மண்டையோட்டினை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதற்காக சூரிய கதிர்களை அகத்துறிஞ்சாத கிறீம் வகைகளை பயன்படுத்தலாம் அல்லது நேரடியான சூரியக் கதிரிலிருந்து தலையை மூடிப் பாதுகாக்க வேணடும்.